# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 6 | **செய்தி மடல்** | எண் : 2

**அக்டோபர் - டிசம்பர் 2019**



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **என்.கே. சுதீப்குமார்**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **கோ.ரா. புஷ்பநாதன்**
மருத்துவர் **டி. ஹரிஹரன்**
மருத்துவர் **எம். ஜோதிலட்சுமி**
முனைவர் **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிசோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. அக்டோபர் முதல் டிசம்பர் 2019 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா 2019

வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை ஒரு பெரிய ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா 2019 நிகழ்ச்சியும், நீர் மேலாண்மை குறித்த 28 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு நடத்தியது.

### ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா - III



ஜல் சக்தி அபியான் கிஸான் மேளா - III நிகழ்ச்சி 30.10.2019 அன்று திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இந்திய ஆட்சி பணி மற்றும் ஆயூஸ் துறை கிளை செயலாளர் திரு. டி.என். ரஞ்சித்குமார் மற்றும் நீர் மேலாண்மை இதர அலுவலர்களும் கலந்து கொண்டு ஜல் சக்தி அபியான் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை குறித்து எடுத்துரைத்தார்கள். கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.பி. ராமநாதன், திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை பொறியியல் அலுவலர் திரு. பிரிட்டோ ராஜ் மற்றும் நாமக்கல் மாவட்ட வன அலுவலர் மருத்துவர் ஆர். கஞ்சனா அவர்கள் கலந்து கொண்டு மழைநீர் சேகரிப்பு முறைகள், நீர் மேலாண்மை முறைகள், நுண்நீர் பாசன முறைகள், நீரை மறுசுழற்சி செய்தல் மற்றும் காடுகளை உருவாக்குதல் குறித்து தொழில்நுட்ப உரையாற்றினார்கள். கே.எஸ்.ஆர். கல்லூரி முதல்வர்கள் முனைவர் தியாகராஜா, முனைவர் குமாரவேல் மற்றும் முனைவர் செந்தில்குமார் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். நீர் மேலாண்மை குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களும், நீர் மேலாண்மை முறைகளை சிறப்பாக கடைப்பிடித்து வரும் விவசாயிகளும் இந்நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டார்கள். நீர் மேலாண்மை குறித்த தகவல்கள் கண்காட்சியில் 15 அரங்கங்களில் விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. நாமக்கல் மாவட்டத்தின் 5 வட்டாரங்களிலிருந்து 490 விவசாயிகளும், 500 மாணவர்களும் 54 களப்பணியாளர்களும் மொத்தமாக 1044 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். 490 மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இந்நிகழ்ச்சியின் போது வழங்கப்பட்டது.



இதுமட்டுமல்லாமல், வேளாண்மை அறிவியல் நிலையம் நீர் மேலாண்மை குறித்து 28 நிகழ்ச்சிகளை மாவட்டத்தில் பல்வேறு வட்டாரங்களில் 1428 நபர்களுக்கு நடத்தியது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு முறைகள், நிலத்தடி நீர் சேமிப்பு முறைகள், நீரை வீணாக்காமல் மறுசுழற்சி செய்தல் ஆகியவை பற்றி விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் எடுத்துரைக்கப்பட்டது.

**மகாத்மா காந்தியின் 150-வது பிறந்தநாள் கொண்டாட்டம்**



மகாத்மா காந்தியின் 150-வது பிறந்தநாள் கொண்டாட்டம் நிக்ரா திட்ட கிராமமான ஜம்புடையில் 02.10.2019 அன்று கொண்டாடப்பட்டது. தூய்மை இந்தியா, ஜல் சக்தி அபியான், பயறுவகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் இயற்கை வள மேலாண்மை முறைகளின் செயல்பாட்டினை பிரபலப்படுத்துதல் தொடர்பாக பள்ளி வளாகங்களை தூய்மைப்படுத்துதல், பண்ணைக்குட்டைகளின் வரப்புகளில் மரம் நடுதல், பனை விதை நடுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை வல்லுநர் திரு. பிரிட்டோ ராஜ் அவர்கள் நீர் மேலாண்மை குறித்து தொழில்நுட்ப உரை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் 177 விவசாயிகளும், 35 மாணவ, மாணவியர்களும் மொத்தம் 212 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மரக்கன்றுகள் மற்றும ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கு தேவையான இடுப்பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. எருமைப்பட்டி வட்டார வேளாண்மைத்துறை உதவி இயக்குநர், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த மற்ற அலுவலர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

காந்திஜியின் 150வது பிறந்தநாள் கொண்டாட்டத்தை அனுசரிக்கும் வகையில் வேளாண்மை அறிவியல் நிலையம், 15.11.2019 அன்று ஆமணக்கில் தொகுப்பு முதன்நிலை செயல்விளக்கத்திற்காககவும் 05.12.2019 அன்று நிலக்கடலையில் தரணி இரகம் கொண்டு தொகுப்பு முதல் நிலை செயல்விளக்கத்திற்காகவும் கோக்கலை கிராமத்தில் அறிமுகப் பயிற்சியினை நடத்தியது. அதுசமயம் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கான இடுபொருட்களும் மற்றும் வளர்ச்சியூக்கிகளும் 43 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் நிக்ரா திட்ட கிராமங்களான முட்டான்செட்டி மற்றும் ஜம்புமடை கிராமத்தில் 04.11.2019 அன்று 50 விவசாயிகளைக் கொண்டு உளுந்து இரகம் வம்பன் 8 மற்றும் பாசிபயிறு இரகம் கோ 8 ஆகியவற்றின் சிறப்பியல்புகளை மற்ற விவசாயிகளுக்கு காண்பிக்க வயல்விழாவினை நடத்தியது.

**தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி**



தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை வேளாண்மை அறிவியல் நிலையம் 16.12.2019 முதல் 31.12.2019 வரை வேளாண்மை அறிவியல் நிலைய வளாகத்தில் மற்றும் விவசாயிகளின் வயல்களில் அனுசரித்தது. இந்நிகழ்ச்சியின் முதல் நாளன்று தூய்மை இந்தியா குறித்த உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அலுவலகம் மற்றும் தேநீர் பருகுவதற்காக முற்றிலும் நெகிழி பொருட்களின் பயன்பாட்டினை தவிர்த்து, எவர்சில்வர் பாத்திரங்களின் பயன்பாட்டினை 05.06.2018 முதல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கொண்டுவந்துள்ளது. மொத்தமாக 187 விவசாயிகளுக்கு தூய்மை இந்தியா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**உரங்களின் சரியான பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி**



உரங்களின் சரியான பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 22.10.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த காணொலி காட்சியும், தொழில் முனைவோரின் செயல்பாடுகளும், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சக அமைச்சர் அவர்கள் உரையாடலின் நேரடி ஒளிபரப்பும் காண்பிக்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையத்தால் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த கண்காட்சியும், இப்கோ நிறுவனத்தின் தயாரிப்புகளில் உள்ள அனைத்து உரங்களும் விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. தரமான மட்கும் உரம் தயாரித்தல், உயிர் உரங்களின் பயன்பாடு குறித்தும் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த தொழில்நுட்ப உரையும், மண்வள அட்டைகளும் வழங்கப்பட்டது. மொத்தமாக 180 விவசாயிகளும், மாணவர்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**வேளாண் பொறியியல் இயந்திரங்களின் பயன்பாடும், பராமரித்தலும் குறித்த ஒருநாள் பணிமனைக் கூட்டம்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 20.11.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையம் கோயம்புத்தூர் மண்டல மையத்தின் மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்துடன் இணைந்து வேளாண் பொறியியல் இயந்திரங்களின் பயன்பாடும், பராமரித்தலும் என்ற தலைப்பில் 1 நாள் பணிமனைக் கூட்டத்தை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் டி. செந்தில்குமார், விஞ்ஞானி முனைவர் இம்ரான் அவர்கள் கலந்து கொண்டு தொழில்நுட்ப உரையும் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு குறித்து காணொலி காட்சியையும் காண்பித்தார்கள். இயந்திரத்தின் பயன்பாடு குறித்த செயல்முறை விளக்கமும் வயலில் செய்து காண்பிக்கப்பட்டது. மொத்தமாக 114 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### உலக மண்வள தினம் 2019




வேளாண்மை அறிவியல் நிலையம் ரிலையன்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து உலக மண்வள தினத்தை 05.12.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கொண்டாடியது. "மண் அரிமானத்தை தடுப்போம்" "வளமான எதிர்காலம் பெறுவோம்" என்ற தலைப்பில் இத்தினம் அனுசரிக்கப்பட்டது. மண்வள மேம்பாடு முறைகள், மண் மூடாக்கு அமைப்பதின் பயன்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த தொழில்நுட்ப உரைகளும், மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை, தரமான மட்கு உரம் தயாரித்தல் மற்றும் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் பற்றிய செயல்முறை விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மொத்தமாக 60 நபர்கள் கலந்து கொண்டனர்.

### வேளாண் அறிவியல் தின விழா - 2019



வேளாண்மை அறிவியல் நிலையம் வடுகம் கிராமத்தில் 25.12.2019 அன்று வேளாண் அறிவியல் தின விழாவினை 37 விவசாயிகளை கொண்டு கொண்டாடியது. இந்நிகழ்ச்சியின் போது நிலக்கடலை மற்றும் சின்ன வெங்காயம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, மண் மற்றும் பாசனநீர் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மண்வள அட்டை மற்றும் தொகுப்பு முதல் நிலை செயல்விளக்கத்திற்கான முக்கிய இடுபொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு மண்வழி ஊட்டமாக பயிர்பாதுகாப்பு பொருட்களை அளிக்கும் வழிகள் குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

### இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் இரகங்களை பரவலாக்கம் செய்தல்



பெங்களூரு, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் வி. சங்கர் அவர்கள் 06.12.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வருகைபுரிந்து இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து வெளியிட்டு காய்கறி இரகங்களை 2017 முதல் முதல் நிலை செயல்விளக்கம் மூலம் சாகுபடி செய்த விவசாயிகளுடன் கலந்துரையாடினார். இத்துடன் மிளகாய் மற்றும் கத்தரியிலுள்ள புதிய வீரிய இரகங்களின் பயன்களை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிப்பதற்காக விதைகளையும் வழங்கினார்.

### இதர நிகழ்ச்சிகள்

வேளாண்மை அறிவியல் நிலையம் சில முக்கிய இதர நிகழ்ச்சிகளை விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கொண்டாடியது.

| நிகழ்ச்சிகள் | தேதி | பயனாளிகள் |
|---|---|---|
| ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம், தேசிய ஒற்றுமை தினம் (வல்லபாய் பட்டேல் அவர்களின் பிறந்த தினம்) | 31.10.2019 | 58 |
| தேசிய அரசியலமைப்பு நாள் | 26.11.2019 | 26 |

### நிதியுதவியுடன் கூடிய பயிற்சிகள்




வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை அகதிகள் நல அமைச்சக நிதியுதவியுடன் இலங்கை அகதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சிறியளவில் காய்கறி சாகுபடி குறிப்புகள், காளான் வளர்ப்பு, மட்குஉரம் தயாரித்தல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு என்ற தலைப்பில் 11.12.2019 முதல் 12.12.2019 வரை ஒரு பயிற்சியும், அட்மா திட்ட நிதியுதவியுடன் நாட்டுக்கோழி வளர்ப்பு என்ற தலைப்பில் 04.11.2019 முதல் 06.11.2019 வரை திருவண்ணாமலை விவசாயிகளுக்கு ஒரு பயிற்சியும், 28.11.2019 முதல் 30.11.2019 வரை நாட்டுக்கோழி வளர்ப்பில் மற்றொரு பயிற்சியை, திருவாரூர் விவசாயிகளுக்கு, கால்நடைகளுக்கு சத்துமிகு தீவனம் தயாரித்தல் என்ற தலைப்பில் 27.11.2019 அன்று நாமக்கல் விவசாயிகளுக்கும் பயிற்சியளித்தது. மொத்தமாக 152 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### களப்பணியாளர்களுக்கான பயிற்சிகள்



வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்புதுறையை சார்ந்த களப்பணியாளர்களுக்கு 15.10.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை திட்டம் 2019 - 20 -ன் கீழ் மானாவாரிகேற்ற ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. வெள்ளாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மானாவாரிக்கேற்ற பழப்பயிர் சாகுபடி குறிப்புகள், வேளாண் காடுகள், மட்கு உரம் தயாரித்தல் என்ற தலைப்பின் கீழ் 30 களப்பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

### உள்ளிடப் பயிற்சிகள்

கடந்த அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் 16 உள்ளிடப்



பயிற்சிகளை 493 விவசாயிகளுக்கு வழங்கியது. வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த இதர துறைகளில் பருவநிலை மாற்றங்களுக்கேற்ற முக்கிய அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்கள் பயிற்சியில் வழங்கியது.

**வெளியிடப் பயிற்சிகள்**



விவசாயிகளின் தேவைக்கேற்ப 12 வெளியிடப் பயிற்சிகளை 448 விவசாயிகளுக்கு, விவசாயிகளின் நிலத்தில் வழங்கியது. வேளாண்மை மற்றும் இதர துறைகளிலுள்ள முக்கிய தொழில்நுட்பங்கள் பயிற்சியில் வழங்கப்பட்டது.

எருமைப்பட்டி வட்டாரத்தை சேர்ந்த பொட்டிரெட்டிபட்டி கிராமத்தில் 24.12.2019 அன்று அட்மா திட்ட பண்ணைப் பள்ளியில் நிலக்கடலை சாகுபடி குறிப்புகள் அடங்கிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தால் வழங்கப்பட்டது.

**மண்டல மாதாந்திர பணிமனைக் கூட்டம்**



வேளாண்மை அறிவியல் நிலையம் 15.10.2019 மற்றும் 12.11.2019 அன்று 90 களப்பணியாளர்களுக்கு மண்டல மாதாந்திர பணிமனைக்கூட்டத்தை நடத்தியது. அதில் நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களிலுள்ள முக்கிய பிரச்சினைகளும் அதற்குரிய தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.

**மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்**



கடந்த அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை விவசாயிகளிடருந்து 166 மண் மாதிரிகளும் பெறப்பட்டு பரிசோதனை செய்து முடிவில் 166 மண்வள அட்டையும், 34 பாசனநீர் வள அட்டையும் உரப்பரிந்துரைகளுடன் வழங்கப்பட்டது.

**கண்டுநர் சுற்றுலா**

கடந்த அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை மொத்தமாக 979 பயனாளிகள் (349 விவசாயிகள் மற்றும் 600 பள்ளி மாணவர்கள்) நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டுள்ளனர். வேளாண்மை அறிவியல் நிலையத்திலுள்ள மாதிரி மற்றும் செயல்விளக்கத் திடல்களை பார்வையிட்டு அதிலுள்ள முக்கிய தொழில்நுட்பங்கள் தெரிந்து கொண்டனர். பள்ளி மாணவர்கள் நிக்ரா கிராமங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டு மழைநீர் சேமிப்பு அமைப்புகளான, ஆயிரம் குட்டை, மண் மூடாக்கு முறைகள், வரப்பு உயர்த்தப்பட்ட வயல்கள், பசுந்தாள் உரமிடல் குறித்து விளக்கப்பட்டது. அத்துடன் தரம் உயர்த்தப்பட்ட மாட்டு கொட்டகை, கோழிக்கூண்டுகள் மற்றும் பசுந்தீவனம் வளர்ப்பு முறைகளும் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது.



**சத்துமிகு காய்கறித் தோட்டம் அமைத்தல்**



மாநில சமச்சீர் வளர்ச்சி திட்ட நிதியுதவியுடன் வேளாண்மை அறிவியல் நிலையம் கொல்லிமலை வட்டாரத்தில் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா பள்ளியில் சத்துமிகு காய்கறித் தோட்டத்தை அமைத்தது. அனைத்து பள்ளி மாணவியர்களும் சத்துமிகு காய்கறித் தோட்டம் அமைப்பதைக் கற்றுக்கொண்டு இயற்கை முறையில் வளர்த்து தங்களது பள்ளியில் வழங்கப்படும் உணவுகளில் சேர்த்துக்கொள்கின்றனர்.

**பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**



பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 21 விவசாயிகளைக் கொண்டு மாசில்லா உழவர் உற்பத்தியாளர் குழு என்ற பெயரில் குழு கொல்லிமலையில் உள்ள இலக்கியம்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு 50 ஏக்கர் பரப்பளவில் இயற்கை முறையில் வாழை, காய்கறி, வாசனைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்காக நாமக்கல் தோட்டக்கலை இணை இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அக்குழு உறுப்பினர்களுக்கு மண் மற்றும் பாசன நீர் வள அட்டைகளும் மற்றும் 3 திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது.

**கண்காட்சி அமைத்தல்**



நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் நாமக்கல் மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி நடத்திய வங்கி நடத்திய வங்கி சாப்பான கண்காட்சி நிகழ்ச்சியில் 1 அரங்கம் அமைத்து அதில் வேளாண் தோட்டக்கலை மற்றும் கால்நடை சம்பந்தமான முக்கிய இடுபொருட்கள் விவசாயிகள் மற்றும் மாணவர்களின் பார்வைக்காக வைத்திருந்தது.